இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2023

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in facebook.com/murasoli180 twitter.com/murasoli180 instagram.com/murasoli180 youtube.com/murasoli180 murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 12 – திருவள்ளுவர் ஆண்டு 2054 – ஆவணி 04 – திங்கள்கிழமை 21 ஆகஸ்ட் 2023 – கோவை ★★ 16 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 82 - Issue 12 : Thiruvalluvar Year - 2054 - Aavani 04 - Monday 21 August 2023 - Kovai ★★ 16 Pages ₹ 5.00

## நவீன தமிழ்நாட்டை கட்டமைத்த கலைஞரின் நூற்றாண்டில்

# நாடாளுமன்ற வெற்றியை நன்றிக் காணிக்கை ஆக்குவோம்!

## கலைஞர் நூற்றாண்டு விழாக் குழுக் கூட்டத்தில் கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் உறுதி!




சென்னை அண்ணா அறிவாலயத்தில், நேற்று முன்தினம் (19.08.2023) காலை, கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில், கலைஞர் நூற்றாண்டு விழாக் குழு உறுப்பினர்கள் – அணிச் செயலாளர்கள் – அமைச்சர்கள் பங்கேற்ற ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் கழகப் பொதுச் செயலாளர் – அமைச்சர் துரைமுருகன், கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி., கழக முதன்மைச் செயலாளர்– அமைச்சர் கே.என்.நேரு, கழக துணைப் பொதுச் செயலாளர்கள் – அமைச்சர் ஐ.பெரியசாமி, அமைச்சர் முனைவர் க.பொன்முடி, ஆ.இராசா எம்.பி., கனிமொழி கருணாநிதி எம்.பி. ஆகியோர் கலந்துகொண்டனர்.

**சென்னை, ஆக. 21 -**

**சென்னை அண்ணா அறிவாலயத்தில், நேற்று முன்தினம் (19.8.2023) காலை, கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில், கலைஞர் நூற்றாண்டு விழாக் குழு உறுப்பினர்கள் - அணிச் செயலாளர்கள் - அமைச்சர்கள் பங்கேற்ற ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.**

இக்கூட்டத்தில் கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:-

80 ஆண்டுகாலப் பொதுவாழ்வு, அரை நூற்றாண்டு காலம் கழகத்தின் தலைமைப் பொறுப்பு, 5 முறை முதலமைச்சர், 13 முறை தேர்தல் களம் கண்டு அனைத்திலும் வெற்றி, ஒரு முறை சட்டமேலவை உறுப்பினர், நவீனத் தமிழ்நாட்டைக் கட்டமைத்த சிற்பி, இந்திய அரசியலில் நெருக்கடி ஏற்பட்ட போதெல்லாம் வழிகாட்டிய மூத்த தலைவர், பல பிரதமர்களையும் குடியரசுத் தலைவர்களையும் தீர்மானித்தவர், இலக்கியவாதி, கவிஞர், நாடக ஆசிரியர், திரைக்கதை - வசனகர்த்தா, பத்திரிகையாளர் என இத்தனைப் பேராற்றலையும் ஒருங்கே பெற்ற ஒருவர், நம் தலைவர் கலைஞரைத் தவிர வேறு எவர் இருக்கிறார்? உலகளவில் தேடிப் பார்த்தாலும் இந்த அளவுக்குப் பன்முக ஆற்றல் கொண்ட ஒருவரைக் காண்பது அரிது.

### ஓய்வின்றி உழைத்தவர்!

நூற்றைம்பது ஆண்டு காலத்தில் செய்ய வேண்டிய பணிகளைத் தனது 80 ஆண்டு கால பொதுவாழ்வில் ஓய்வின்றி உழைத்து நிறைவேற்றிய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டை தி.மு.கழகம் சார்பிலும், அவரது வழியில் நடக்கும் நமது திராவிட மாடல் அரசின் சார்பிலும் கொண்டாடி மகிழ்ந்து வருகிறோம்.



அவர் பார்த்துப் பார்த்துக் கட்டிய இந்த அண்ணா அறிவாலயத்தில் நாம் கூடியிருக்கிறோம். இந்த அறிவாலயம் அமைந்துள்ள அண்ணா சாலையில் மட்டுமல்ல தமிழ்நாடு முழுவதும் பல்வேறு உட்கட்டமைப்பு வசதிகளையும் அனைத்துத் தரப்பு மக்களும் பயன்பெறும் வகையிலான திட்டங்களையும் உருவாக்கியவர் தலைவர் கலைஞர் அவர்கள்.

சென்னையில் உள்ள வள்ளுவர் கோட்டம் முதல், குமரி முனையில் உள்ள அய்யன் திருவள்ளுவர் சிலை வரை தமிழ்நாடெங்கும் பண்பாட்டு அடையாளங்களை உருவாக்கியவர் கலைஞர்.

### தமிழர் சுயமரியாதையுடன் வாழ ஓயாது பாடுபட்டவர்!

மினி பஸ், மெட்ரோ ரயில், டைடல் பார்க், உழவர் சந்தை, மகளிர் சுயஉதவிக் குழுக்கள், பெரியார் நினைவு சமத்துவபுரங்கள் - என நாம் பட்டியலிடத் துவங்கினால் இன்று முழுவதும் பட்டியலிட்டுக் கொண்டே இருக்கலாம். இப்படி திட்டங்கள் பல தீட்டி ஒவ்வொரு தமிழரும் சுயமரியாதையுடன் வாழ ஓயாது பாடுபட்டவர் தலைவர் கலைஞர்.

இந்தியாவுக்கே முன்னோடியாக அவர் கொண்டுவந்த பல்வேறு திட்டங்களைத்தான், ஒன்றிய அரசுகள் நடைமுறைப்படுத்தின. இப்போதும் நடைமுறைப்படுத்துகின்றன. இப்படிப்பட்ட தலைவரின் வரலாற்றை மறைக்க, திரித்து எழுதும் கூட்டத்திடமிருந்து, உண்மை வரலாற்றை நாம் காப்பாற்றிட வேண்டும்

தொடர்ச்சி 4ஆம் பக்கம்

# மணிப்பூரில் கலவரம் முடிவுக்கு வரவில்லை!

## மக்கள் அச்சம்!

*சென்னை, ஆக. 21 -*

மணிப்பூரில் கலவரம் முடிவுக்கு வரவில்லை. மக்கள் இன்றும் அச்சத்துடனயே வாழ்கின்றனர்' என்று மணிப்பூரைச் சேர்ந்த விளையாட்டு பயிற்சியாளர் ஹரிபியாரி தெரிவித்தார். சென்னையில் பயிற்சி பெறும் வாள்வீச்சு அணியின் பயிற்சியாளரான ஹரிபியாரி தேவி நேற்று முன்தினம் கூறியதாவது: மணிப்பூரில் ஏற்பட்ட கலவரம் காரணமாக கடந்த 3 மாதங்களாக எந்த விளையாட்டு வீரர் களும், வீராங்கனைகளும் பயிற்சி பெற முடியவில்லை. எனவே அடுத்து நடைபெற உள்ள தேசிய விளையாட்டுப் போட்டிகளை கருத்தில் கொண்டு, தமிழ்நாடு முதல்வர் அழைத்ததும், சென்னை வந்து விட்டோம். இங்கு எங்களுக்கு தங்குமிடம், உணவு, பயிற்சிக்கு வந்துச் செல்ல வாகன வசதிகள் செய்து தரப்பட்டுள்ளன. குறிப்பாக மணிப்பூர் உணவும் ஏற்பாடு செய்துள்ளனர்.

தமிழ்நாடு உணவும் நன்றாக இருக்கிறது. அதற்காக தமிழ்நாடு முதல்வருக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறோம். அமைச்சரும் கனிவாக பேசுகிறார். மணிப்பூரில் இன்றும் இயல்பு நிலை திரும்பவில்லை. பள்ளிகள் திறக்கப்பட்டாலும், மாணவர்கள் யாரும் வகுப்புகளுக்கு செல்வதில்லை. அதேபோல் வேலைகளுக்குச் செல்லவும் மக்கள் பயப்படுகின்றனர். இப்படி மக்கள் வெளியே வரவே அச்சப்படும் சூழல் தொடர்கிறது. அதனால் மக்கள் வீடுகளிலேயே முடங்கிக் கிடக்கின்றனர். அந்த நிலைமை விரைவில் மாற வேண்டும் என்று எல்லோரும் வேண்டிக் கொள்ளுங்கள். மணிப்பூரில் இன்றும் இயல்பு நிலை திரும்பவில்லை. பெயருக்குத்தான் பள்ளி, கல்லூரிகள் திறந்திருக்கின்றன.

இவ்வாறு அவர் கூறினார்.

## ‘நீட்’ தேர்வு: ஒன்றிய அரசு - ஆளுநரைக் கண்டித்து தமிழ்நாடு முழுவதும்

# மாபெரும் உண்ணாவிரதப் போராட்டம்!

## சென்னையில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பங்கேற்பு - கழகப் பொதுச் செயலாளர் துரைமுருகன் துவக்கி வைத்தார்!

**சென்னை, ஆக. 21-**

**‘நீட்’டை திணிக்கும் ஒன்றிய அரசு - ஆளுநரைக் கண்டித்து இளைஞர் அணி, மாணவர் அணி, மருத்துவ அணி சார்பில் நேற்று (ஆக. 20) மாபெரும் உண்ணா விரத அறப்போர் தமிழ்நாடு முழுவதும் நடைபெற்றது.**

**சென்னையில் கழக இளைஞர் அணிச் செயலாளர் - அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பங்கேற்ற உண்ணாவிரத அறப்போராட்டத்தை கழகப் பொதுச் செயலாளர் துரைமுருகன் துவக்கி வைத்தார்.**

**இதேபோன்று தமிழ்நாடு முழுவதும் நடைபெற்ற உண்ணாவிரத அறப்போராட்டத்தில் அமைச்சர்கள் கழக முன்னணியினர், கழகத் தோழர்கள் என லட்சக்கணக்கானோர் கலந்துகொண்டு ஒன்றிய அரசுக்கு ஆளுநருக்கு எதிராக முழக்கமிட்டனர்.**

தமிழ்நாட்டு மாணவர்களின் மருத்துவராகும் கனவைச் சிதைத்து - அவர்களின் உயிரைப் பறிக்கின்ற உயிர்க்கொல்லியாக நீட் தேர்வு உருவெடுத்திருக்கிறது.

மாணவர்களை மட்டுமன்றி, பெற்றோரையும் மரணக்குழியில் தள்ளும் நீட் தேர்வை ரத்து செய்யாத ஒன்றிய அரசையும், பொறுப்பற்ற ஆளுநரையும் கண்டித்து, கழகத் தலைவர் -தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, தி.மு.கழக இளைஞர் அணி - மாணவர் அணி - மருத்துவ அணி சார்பில், தமிழ்நாடு முழுவதும், நேற்று (ஆகஸ்ட் 20 ) அந்தந்த மாவட்டத் தலைநகரங்களில் மாபெரும் உண்ணாவிரத அறப்போரை நடத்தவுள்ளோம் என்று இளைஞர் அணி, மாணவர் அணி, மருத்துவ அணி நிர்வாகிகள் அறிவித்திருந்தனர்.

### ‘நீட்’ மரணங்களுக்கு ஒன்றிய அரசும் ‘நீட்’ காவலர் ஆளுநருமே காரணம்!

மேலும் அந்த அறிக்கையில், அரியலூர் அனிதாவில் ஆரம்பித்த நீட் மரணம், குரோம்பேட்டை ஜெகதீஸ்வரன், அவரது தந்தை செல்வசேகர் வரை தொடர்கிறது. செல்வசேகர் அவர்களின் திருவுடலுக்கு மரியாதை செய்யச் சென்றபோது, யாரை தேற்றுவது - யாருக்கு ஆறுதல் சொல்வதென்று கேட்கும் அளவுக்கு அங்கு எல்லோரும் சோகத்தில் உறைந்திருந்தார்கள். நமக்கே அங்கு ஆறுதல் தேவை என்ற நிலைதான் இருந்தது. இந்த மரணங்கள் அனைத்திற்கும், ஒன்றிய பா.ஜ.க. அரசும் - அவர்களுக்கு அடிமைச் சேவகம் செய்யும் அ.தி.மு.க.வினரும் - நீட் பாதுகாவலர் ஆளுநர் ரவியுமே காரணம். ஒட்டுமொத்த தமிழ்நாட்டு மக்கள் எண்ணத்தின் வெளிப்பாடாக நீட் தேர்வுக்கு விலக்கு பெறும் முயற்சிகளை தமிழ்நாடு அரசு தொடர்ந்து எடுத்து வருகிறது.

ஆனால், அந்த நடவடிக்கைகளுக்கு எல்லாம் ஆளுநர் ரவி முட்டுக்கட்டை போட்டு வருகிறார். நம் மாணவச் செல்வங்களின் மரணம், ஆளுநரையோ, அவரை இங்கு அனுப்பியுள்ள ஆரிய மாடல் ஆட்களையோ துளியும் பாதிக்கவில்லை.

### ‘நீட்’ தேர்வுக்கு பல லட்சம் செலவு செய்தவர்களும் அதை எதிர்க்கிறார்கள்!

“நீட் மசோதாவில் கையெழுத்துப் போட மாட்டேன்” என்று கூறிய ஆளுநரிடம், சேலத்தைச் சேர்ந்த அம்மாசியப்பன் ராமசாமி நேருக்கு நேர் கேள்வி எழுப்பியபோது, அதற்குப் பதில் அளிக்க முடியாத ஆளுநர் அவரிடம் இருந்த மைக்கை பிடுங்கி உட்காரச் சொல்கிறார்.

இத்தனைக்கும் ஆளுநரிடம் கேள்வி எழுப்பிய அம்மாசியப்பன் ராமசாமி அவர்களின் மகள் நீட் தேர்வில் வெற்றி பெற்றுள்ளார். நீட் தேர்வில் வெற்றிபெற்றவர்கள், பயிற்சி மையம் சென்று லட்சங்கள் செலவு செய்து தேர்வில் வென்றவர்கள்கூட நீட்டை எதிர்க்கிறார்கள்.

நீட் விலக்கு மசோதாவை குடியரசுத் தலைவரின் பரிந்துரைக்கு அனுப்பி வைத்த பிறகு, ஆளுநர் எப்படி அதில் கையெழுத்திட முடியும்?

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் ஆட்சியின் போது, அம்மையார் ஜெயலலிதா ஆட்சியில் இருந்த போது வராத நீட், அடிமை அ.தி.மு.க. ஆட்சியின் போது தமிழ்நாட்டுக்குள் வந்தது.

நீட் விலக்கிற்காக 2017-ஆம் ஆண்டு அ.தி.மு.க. அரசு நிறைவேற்றி அனுப்பிய சட்ட மசோதாவை, குடியரசுத்தலைவர் நிராகரித்ததை, 21 மாதங்கள் வரை, தமிழ்நாடு சட்டப் பேரவைக்குத் தெரிவிக்காமல் அ.தி.மு.க. அடிமைகள் மறைத்தனர். ஒன்றிய உள்துறை அமைச்சகம், சென்னை உயர் நீதிமன்றத்தில் கூறிய போது தான், அது தமிழ்நாட்டுக்கே தெரிய வந்தது.

இப்படிப்பட்ட துரோக வரலாற்றைக் கொண்ட எடப்பாடி பழனிசாமிக்கோ, பிற அ.தி.மு.க. அடிமைகளுக்கோ நம்மை விமர்சிக்க எந்த அருகதையும் இல்லை.

### ‘நீட்’ தேர்வை தொடர்ந்து எதிர்க்கும் தி.மு.கழகம்!

நீட் தேர்வுக்கு எதிராக, தமிழ்நாட்டில் தொடர்ச்சியாகக் குரல் எழுப்புகிற இயக்கமாக நம்முடைய திராவிட முன்னேற்றக் கழகம் இருந்து வருகிறது. கழகத்தலைவர் - தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின் பேரில், தி.மு.கழக இளைஞர் அணி - மாணவர் அணி சார்பில் நீட் தேர்வுக்கு எதிராகப் பல்வேறு போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

தொடர்ச்சி 4ஆம் பக்கம்